**அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களை பெறுகை செய்வதற்கான ஐ.அ.டொலர் 100 மில்லியன் அவசர உதவிச் செயற்திட்டம் - 2024**

---

அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களை பெறுகை செய்வதற்கான ஐ.அ.டொலர் 100 மில்லியன் அவசர உதவிச் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் 2019 ஏப்ரல் 25 ஆம் திகதிய L0081A ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் அட்டவணை 2 இன் பிரிவு II(ஆ)(3) மற்றும் L0124A ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம், வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவை நிறைவேற்றல் முகவராகவும், மறுசீரமைப்புக்குப் பின்னர், சுகாதார அமைச்சு நிறைவேற்றல் முகவராகவும், மேலும் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. உயிர்காக்கும் மருந்துகள், தடுப்பூசிகள், அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சைக்கான நுகர்பொருட்கள் , மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட இரசாயனங்கள் உள்ளிட்ட முக்கியமான மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்வனவு செய்வதற்கான ஆதரவினை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். பெறுகை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கான ஆலோசனை சேவை மற்றும் தொழில்நுட்ப உதவிக்கும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்கும் நிதியளிக்கப்படலாம். மறுசீரமைப்பு கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா. 35,000 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆனதுடன் இதற்கு கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்திலிருந்து ஐ.அ.டொலர் 70 மில்லியனும் மற்றும் தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைப்பதற்கான செயற்திட்டத்திலிருந்து ஐ.அ.டொலர் 30 மில்லியனுமாக ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஆனால் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா. 18,000 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் தொகையாக மீள ஒதுக்கீடு செய்யப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2022 யூலை 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் - இலக்கம் 138 | ஒவ்வொரு கொடுப்பனவிற்கும் செலவானது சான்றுறுதி செய்யப்படல் வேண்டும், ஆனால் நிதி முகாமையாளர் சான்றுறுதி செய்யாமல் ரூபா.31,707,772 தொகை கொடுப்பனவினை மேற்கொண்டுள்ளார். | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு கொடுப்பனவுகளும் தற்செயலாக கவனிக்கத் தவறியது காரணமாக கணக்காளரால் சான்றுறுதி செய்யப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களை பின்பற்றுதல் வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1. ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15,000 எண்ணிக்கையான Human Anti D (Rho) Immunoglobulin 300mcg/1.5mlvials- (SR 00602801) கொள்வனவு செய்வதற்கு ரூபா.137 மில்லியன் மதிப்பீடொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், மதிப்பீட்டு பெறுமதியான ரூபா.137 மில்லியனை விட அதிகமான ரூபா.270 மில்லியன் தொகையான இரண்டாவது விலைமனு பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. | இந்த மருந்து 2024 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து உற்பத்தியாளரிடமிருந்து வேறு ஒரு வழங்குனரால் வழங்கல் செய்யப்பட்டது. எனவே, கால வேறுபாடு மற்றும் உற்பத்தி நாட்டைக் கருத்தில் கொண்டு, வழங்கப்பட்ட விலையாது செயற்திட்ட பெறுகை குழுவால் நியாயமானதாக கட்டுப்படுத்தப்படுகின்றது. | சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலத்திரனியல் சோலாங்கியோ-பான்ட்ரீட்டோஸ்கோப் (Digital Cholangio-Pantreatoscope) 90 அலகுகள் , அணுகல் மற்றும் விநியோக வடிகுழாய் (catheter) (SR 15320101) மற்றும் ஸ்பை பைட் வகை அல்லது அதைப் போன்ற சோலாங்கியோ-பான்ட்ரீட்டோஸ்கோப் | | |

| | | | |
|---|---|---|---|
| | (Cholangio - Pantreatoscope) உடன் இணக்கமான பயாப்ஸி போர்செப்ஸ் (SR 15320102) 90 அலகுகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா. 114.0 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 01 ஆம் இலக்க உருப்படிக்கு ரூபா. 161,820,000 மற்றும் 02 ஆம் இலக்க உருப்படிக்கு ரூபா. 20,250,000 பெறுமதியான விலை கூறுவிலை கோரிக்கையினை ஒரே ஒரு வழங்குனர் மாத்திரமே சமர்ப்பித்துள்ளார். 2024 யூலை 05 அன்று நடைபெற்ற பெறுகை குழு கூட்டத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது மற்றும் ஒப்பந்தம் 2024 யூலை 18 அன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இந்த பெறுகைக்கான மதிப்பீடு ரூபா. 114 மில்லியனாக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ரூபா. 182.07 மில்லியனாக இருந்தது. இதன் விளைவாக, மதிப்பீட்டை விட ரூபா. 68.07 மில்லியன் தொகை அதிகமாக காணப்பட்டது. எவ்வாறாயினும், அலகுகளின் எண்ணிக்கை 20 ஆல் குறைக்கப்பட்டதன் காரணமாக , விலைமனுவானது ரூபா. 141 மில்லியனாக காணப்பட்டதுடன் மதிப்பீட்டை விட ரூபா. 27.61 மில்லியன் தொகையானது விஞ்சியதாக காணப்பட்டது. | தேசிய பெறுகை வழிகாட்டுதல்களிலோ அல்லது வங்கிகளின் இடைக்கால செயல்பாட்டு உத்தரவிலோ வழங்கப்பட்ட தொகையானது செலவு மதிப்பீடுகளை விட அதிகமாக இருந்தால் வழங்குவதைத் தவிர்ப்பதற்கு எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. | சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | பெறுகை அட்டவணையின் பிரகாரம் இந்த பெறுகையானது 43 வாரங்களுக்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும் என்றபோதிலும், அதற்காக 68 வாரங்கள் செலவிடப்பட்டிருந்தன. | கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை அட்டவணையின் பிரகாரம் பெறுகையினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாற்று மருந்துகளை பெறுகை செய்வதற்காக ஐ.அ.டொலர் 0.69 மில்லியனுக்கு சமமான ரூபா. 252 மில்லியன் மதிப்பீட்டு தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் விலை மனுக்கான காலப்பகுதி இரண்டு வாரங்கள் ஆகும். இரண்டு விலைமனுக்கள் பெறப்பட்டதுடன் 2024 யூன் 18 அன்று விலைமனுக்கள் திறக்கப்பட்டன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை 2024 யூலை 29 அன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், முதல் விலைமனுதாரர் விலைமனுக்கள் திறக்கும் நேரத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை என்பதன் காரணமாக அந்த விலைமனுதாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூன்று உறுப்பினர்களில் இரண்டு உறுப்பினர்கள் உடன்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்ட பரிந்துரையானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்தப் பரிந்துரையினை 2024 ஆகஸ்ட் 26 அன்று பெறுகை குழு அங்கீகரித்திருத்தது. அதன் பிரகாரம், 2024 செப்தெம்பர் 18 அன்று 200,000 எண்ணிக்கையான மருந்து குப்பிகளை ஐ.அ.டொலர் 1,380,000 மொத்த கிரயத்தில் வழங்கல் செய்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | விலை மனு ஆவணங்களை பெறுகை குழு 2023 ஒக்தோபர் 26 அன்று அங்கீகரித்திருந்த போதிலும், விலைமனுக்களை அழைப்பதற்கு 07 மாதங்களுக்கும் அதிகமாக 2024 மே 30 வரையிலும் தாமதமாகியிருந்தது. | விலைமனுக்களை அழைப்பதற்கு முன்பு PMU முன் MSD இன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு அங்கீகாரம் வழங்கியுள்ளது. | திட்டமிட்ட அட்டவணையின் பிரகாரம் பெறுகையினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தெரிவு செய்யப்பட்ட விலை மனுதாரர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து (NMRA) சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு அவகாசம் வழங்குவதற்காக வேண்டி விலைமனுவானது பெறுகை ஆவணத்தை செயற்திட்டத்தின் பெறுகை குழு அங்கீகரித்ததிலிருந்து 07 மாதங்கள் வரையிலும் கோரப்பட்டிருக்கவில்லை என்ற சந்தேகம் கணக்காய்வுக்கு உண்டு. | மருத்துவ வழங்கல் பிரிவின் உறுதிப்படுத்தல் 2023 நவம்பர் 02 அன்று கோரப்பட்டது மற்றும் அதற்கு 2024 பெப்ரவரி 07 அன்றைய மருந்து பொருட்கள் பெறுகை குழு கூட்டத்தில் பதிலளிக்கப்பட்டது. | பெறுகை செயல்முறையானது வினைத்திறனாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் செயல்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையானள விடயங்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| பொருட்கள் வாங்குதல் முறைக்கான (கூறுவிலைக்கான கோரிக்கை) உச்ச வரம்பு AIIB ஆல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்து. செயற்திட்டத்தை செயல்படுத்துவதற்கான தந்திரோபாயமாக ரூபா. 73 மில்லியன் இருந்த போதிலும், மொத்த பெறுமதி ரூபா. 666.58 மில்லியன் தொகையினை கொண்ட 06 பெறுகைகள் அந்த வரம்பினை மீறியதாக வழங்கப்பட்டிருந்தன. | விலைமனு செயல்முறை நிறைவடைந்த பின்னர், மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளை விட உண்மையான விலைகள் அதிகமாக இருந்தன். செயற்திட்ட பெறுகை குழுவின் அதிகார எல்லைக்குள் பொதிகள் இருந்ததன் காரணமாக வெற்றி பெற்ற விலை மனுதாரர்களுக்கே பொதிகள் வழங்கப்பட்டன. | AIIB இனால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |